
# கல்வி!



சுவாமி பிரபஞ்சநாதன்

# கல்வி!

அறியாமையிலிருந்து விடுபட்டு, அறிவாய் தன்னை அறிவதே "**அறிவு**" அல்லது **ஞானம்** என்று அறியப்படவேண்டும்.

இதிலே, **அறியாமை** என்று எதைக் கூறுவது?

மனதில் *ஏற்றிவைத்துக் கொண்ட ஏராளமான எண்ணங்களையே* **அறியாமை** என்று கூறப்படுகிறது.

இது என்ன முரண்பாடாக இருக்கிறதே!...

புறத்திலிருந்து ஏற்றிவைத்துக்கொள்கிற எல்லா படிப்பினைகளும் நமக்கு கற்றுக்கொடுப்பதுதானே "**அறிவு**" என்றல்லவா நினைத்துக்கொண்டு இருக்கிறோம். அதனால்தானே அவைகள் அனைத்தையும் மனதில் ஏற்றி வைத்துக்கொள்கிறோம். அதிலே, அனேக பாடங்களை மனப்பாடப்பகுதிகளாகப் படிக்கவும் செய்கிறோம்.

அவ்வாறு கற்றவைகளில் ஒரு குறிப்பிட்ட பிரிவில் **(இயற்பியல், வேதியியல், மருத்துவம், பொருளாதாரம், வணிகவியல், பொறியியல், சட்டம்)** பல பட்டங்களை வேறு பெற்றுக் கொள்கிறோம்.

அதை வைத்துத்தான், நாம் உயிர்வாழத்தேவையான வயிற்றுப் பிழைப்பும் நடத்தி வருகிறோம்.

அதிலேயும், ஓய்வு இல்லாமல் கற்றுத்தருகின்ற கல்விக் கூடங்களை மட்டும்தான் **சிறந்த பள்ளிக்கூடம்** என்று நாடுகிறோம்.

அத்துடன், ஆங்கிலம் என்பது வெறும் **மொழி அறிவுதான்** என்பதை அறியாமல், அவசியம் மெட்ரிக் பள்ளிகளிலேயே நம் குழந்தைகளைப் படிக்க வைக்கிறோம்.

அத்துடன், அவர்கள் வீட்டிற்கு வந்துவிட்டால் சரியாகப் படிக்க மாட்டார்கள் எனக்கருதி, அந்த பள்ளியின் விடுதியிலேயே தங்க வைத்து அல்லும், பகலும் அயராது அவர்களைப் படிக்க வைக்கிறோம்.

அதன்வாயிலாக, அவனோ அல்லது அவளோ ஏதாவது ஒரு பிரிவில் **பட்டம்** பெற்றுக் கொண்டு வந்துவிட்டால், அவன் - அவள் மெத்தப் **படித்தப் பட்டதாரி** அல்லது **அறிவாளி** என்று கருதுகிறோம்.

இதுதானே இன்றைய உண்மை!...

இதனையெல்லாம் அறியாமை என்றால்,
ஆக “**அறிவு**” என்பது என்ன?

இதுவரை நாம் எதையெல்லாம் அறிந்து வைத்துக் கொண்டிருக்கிறோமோ? அல்லது எண்ணங்களாக ஏற்றி வைத்துக் கொண்டிருக்கிறோமோ?, அவைகள் அத்தனையையும் அறிவதற்கு, ஆதாரமாக எது? உள்ளதோ, அதை அறிந்துக் கொள்வதே “**அறிவு**” எனப்படுகிறது.

அதாவது, “**எதை அறிந்துக் கொண்டால், வேறு எதையும் அறியத்தேவை இல்லையோ, அதை அறிவதே அந்த ‘அறிவு’.**” என்பதை அறிந்துக் கொள்வதுதான் ‘**கல்வி**’ எனப்படுகிறது.

நாம் அனைவரும் பல்வேறு பாடங்களைப் படிக்கிறோம். அதன் வாயிலாகப் பலவற்றை புரிந்துக்கொள்ள முயற்சிக்கிறோம்.

அத்துடன், மற்றவர்களால் நமக்கு ஏற்றிவைக்கப்படுகின்ற ஏராளமான எண்ணப்பதிவுகளையும் புரிந்துக்கொள்ள முயற்சிக்கிறோம்.

அதன் வாயிலாக, ‘**இது, இது இன்னது**’ என்று அறிந்துக் கொள்கிறோம்.

இந்த **அறிவு** அல்லது **அந்த புரிதல்** யாரிடத்தின் உண்டாகிறது?

<u>நம்மிடம்தானே!</u>

அதாவது, **மனிதனாகிய நம்மிடம்தானே.**

அதுவும் நமக்கு கிடைத்துள்ள பிரத்யேக பகுத்தறிவாகிய **ஆறாம் அறிவு** என்ற பிரத்யேக **மனதின்மூலம் தானே!...**

இந்த புரிதலும், அறிதலும் நம்மைவிடக் குறைவான அறிவு கொண்ட மிருகங்களுக்கோ, பறவைகளுக்கோ சாத்தியமில்லைதானே!...

அப்படியிருக்க...

அனைத்தையும் அறியக்கூடிய **அந்த மனமா!... நாம்?**

அல்லது,

ஆறாம் அறிவாகிய மனதைக் கொண்ட **உடலா!... நாம்?**

**யோசித்துப் பாருங்கள்...!**

அனைத்தையும் அறியக்கூடிய ஒரு "**அறிவு**" படைக்கப்பட்ட அனைத்திலும், **ஒரு அறிவு** முதற்கொண்டு, **ஆறு அறிவு** வரை பிரதி பிம்பித்துக்கொண்டு பிரகாசிப்பதிலே, பிரத்யேக **பகுத்தறிவு கொண்ட** மனிதனிடம் மட்டுமே '**ஆறாம் அறிவு**' என்ற மனதின் மூலம் தெள்ளத் தெளிவாக பிரகாசிக்கின்றது.

அந்த பிரகாசத்தின் வாயிலாகவே, மனிதன் அனைத்தையும் அறிந்துக்கொள்ள முடிகிறது.

அதுவும், அந்த பிரகாசம் மிகத் தெளிவாக பிரகாசிக்கும்படி படைக்கப்பட்ட ஆறாம் அறிவாகிய மனித **மனதின் மூலம்** மட்டுமே, அனைத்தையும் அறியக்கூடிய அறிவாகச் சுடர்விடுகிறது.

இதை அறிந்துக் கொள்வதே "**அறிவு**" அல்லது "**கல்வி**" என்று அன்றைய கல்விமான்களால் கற்பிக்கப்பட்டு வந்தது.

அதாவது, அந்த "**அறிவு**" ஒன்று இருப்பதினாலேயே, இந்த மனித உடல், மனதின் வாயிலாக அனைத்தையும் அறிகின்றது எனும்போது, அகத்தில் உள்ள உன்னத **அறிவை** (Consciousness) உணராமல், அறியாமையிலே, புறத்தில் இருந்து ஏற்றி வைத்துக்கொண்டுள்ள ஏராளமான எண்ணங்களையெல்லாம் '**அறிவு**' (Knowledge) என்று கருதுவது, மனிதப்பிறவியின் **மடமை** என்றே கூறப்படவேண்டும்?

ஆக, <u>நாம் உண்மையில் எதை அறிய வேண்டும்?</u>

அல்லது, <u>எதைக்கற்க வேண்டும்?</u>

தன்னை அறியக்கூடிய தலையாய கல்வியைக் கற்பது விடுத்து, கட்டாயமாக்கப்பட்ட தொழிற்கல்வியை மட்டுமே "**கல்வி**" என்பதாகக் கருதிக்கொண்டு கற்பது, இன்றைய கற்றறிந்தவர்களின் **அறியாமை** என்றே கருதப்பட வேண்டும்.

அதுவும், அரிதான இந்த மனித உடலிலே, எதை அறிய வேண்டுமோ? அதையறியாமல், மற்ற அனைத்தையும் அறிவதை "**அறிவு**" என்று யார் கூறினார்கள்?

அதுவும், உலகியல் வாழ்க்கைக்கு **பணமும், படிப்பும்** மட்டுமே பிரதானம் என்று யார்? இவர்கள் மனதிலே ஏற்றி வைத்தார்கள்…!

உண்மையில், அன்றைய நம் அறிஞர் பெருமக்கள் அறிந்துணர்ந்த அறிவை நாம் அறிந்துக்கொள்ள ஆர்வம் கொண்டுள்ளோமா…?

**எல்லாம் அறியும் அறிவுதனை விட்டு**
**எல்லாம் அறிந்தும் இலாபம் அங்கில்லை**
**எல்லாம் அறிந்த அறிவினை நான்என்னில்**
**எல்லாம் அறிந்த இறை எனல் ஆமே.**

- திருமந்திரம்.

**<u>கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்</u>**
**<u>நற்றாள் தொழாஅர் எனின்.</u>**

- (அதிகாரம்: கடவுள் வாழ்த்து - குறள் எண்:2).

**“எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும்**
**இயல் உண்மை அறிவின்ப வடிவாகி நடிக்கும்**
**மெய்ப்பொருளாம் சிவம் ஒன்றே என்றறிந்தேன்”.**

- (வள்ளல்பெருமானார் - அனுபவமாலை)

புறத்திலே இருந்து படிக்க வேண்டிய பாடம் என்பது, நம்மை நாம் அறிவதற்கான அற்புத பாடங்களாக மட்டுமே அவைகள் இருக்கப்பட வேண்டும்.

அதுவும், அந்த பாடங்களின் வாயிலாக, இந்த உடலையும், மனதையும் “**நான்**” என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற நம் **அறியாமை** அகற்றப்பட வேண்டும்.

இதை எடுத்துக் கூறுவதே உண்மையான “**கல்வி**” என்று கருதினர் அன்றைய நம் முன்னோர்கள்.

அதன் பிறகு, மனிதன் இந்த மண்ணிலே **உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம்** என்ற அத்யாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்துக்கொள்ள ஏதுவாக, **தொழிற்கல்வி** கற்கும் முறையையும் நம் முன்னோர்கள் உண்டாக்கி வைத்தனர்.

ஆனால், அறியாமையினாலே, அந்த தொழிற்கல்வியை மட்டுமே “**கல்வி**” என்பதாகக் கருதிக்கொண்டு, அதைக் கற்பதுதான் “**அறிவு**” என்பதாகவும் எண்ணிக்கொண்டு, ஏற்றி வைத்துக்கொண்ட ஏராளமான எண்ணங்களின் வாயிலாக, இன்றுவரை அதையே “**கல்வி**” என்று நம் இளைய தலைமுறைகளுக்கு கற்றுக்கொடுக்கிற **அறியாமையை** இன்றைய பெற்றோர்களிடமிருந்தும், இந்தக் கல்விமுறையில் கற்றுக்கொண்ட இன்றைய ஆசிரியர்களிடமிருந்தும், ஆட்சியாளர்களிடமிருந்தும் அவசியம் அகற்றப்பட வேண்டும்.

ஆனால், அன்றைய அறிஞர் பெருமக்கள் அறியாமையில் இருக்கும் நம்மை, “**அந்த அறிவாகவே ‘நீ!’ இருக்கிறாய்!**” என்று காட்டிக் கொடுக்கும் அற்புத வழிமுறையைத்தான் “**கல்வி**” என்று கற்றுக் கொண்டனர். மற்றவர்களுக்கும் அதைத்தான் கற்றுக் கொடுத்தனர்.

அத்துடன், **அறிவு** என்பதாக அனைத்தையும் அறிந்துக்கொள்வது, பிரத்யேக மனித **மனம், உடல்** வாயிலாக, அந்த **ஏக அறிவு**தான் அறிந்துக்கொள்கிறது என்று எடுத்துக் கூறினர்.

அதுதான், நம்முடைய **சனாதன தர்மம்** நமக்கு காட்டிக்கொடுத்த '**குருகுலக்கல்வி**' என்ற பாடத்திட்டங்களாகும்.

ஆனால், ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட **மெக்காலே கல்வி** முறையாகிய அன்றைய தொழிற்கல்வியை மட்டுமே, இன்றைய **கல்வி** என்பதாகக் கருதிக்கொண்டு, இன்றுவரை அதனையே கற்றுக்கொண்டிருக்கிற மாணவர்களையும், இதைக்கற்றுக் கொடுக்கின்ற கல்வியாளர்களையும் கொண்ட நம் பாரதம் இந்த கல்விமுறையிலிருந்து விழித்துக்கொள்ள வேண்டும்.

அதனால், இன்றைய கல்விமுறை கட்டாயம் மாற்றப்பட வேண்டும். அதுவும், அனைத்து மாணவர்களுக்கும் பத்தாம் வகுப்புவரை பண்புகளையும், ஒழுக்கத்தையும் மட்டுமே கற்றுக் கொடுக்கக்கூடிய, பாடத்திட்டங்கள் நம்முடைய கல்வித்திட்டத்தில் கொண்டுவரப்பட வேண்டும்.

அப்பொழுது மட்டுமே, எதிர்கால இளைய சமுதாயம் '**இருப்பதெல்லாம் அறிவு**' என்று அறிந்துக்கொண்டு, அனைவரிடமும் **அன்பும், பண்பும்** கொண்டு ஒழுக்கத்துடன் பழக ஆரம்பிக்கும்.

அதன்வாயிலாக, இன்று தலைவிரித்தாடுகின்ற **இலஞ்சம், கொள்ளை, கொலை, தற்கொலை** போன்றவைகள் நிகழாமல் தடுக்கவும் முடியும். அத்துடன், நம்முடைய முன்னால் குடியரசுத்தலைவர் **அப்துல்கலாம்** அய்யா கண்ட கனவும் நனவாகும்.

பத்தாம் வகுப்புக்குப்பிறகு மட்டுமே, பணம் சம்பாதிக்கும் கல்வி முறையான **தொழிற்கல்வி** அனைவருக்கும் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

ஆனால், இன்று கல்விச்சாலையில் குழந்தையை படிக்க வைக்கத் தொடங்கும்போதே, எதிர்காலத்தில் என்னவாகப் போகிறாய்? என்று

பணம் சம்பாதிக்கும் பயிற்சி முறைகளான, **தொழிற்கல்வி** மட்டுமே திணிக்கப்படுகிறது.

அதைவிடுத்து, அன்று அரசு பள்ளிகளில் படித்ததுப்போன்ற நற்பண்புகளை போதிக்கக்கூடிய நல்ல பாடத் திட்டங்களையும், நம்முடைய அனைத்து அறிஞர் பெருமக்களின் அறிவுரைகளும் கொண்ட அற்புதப் பாடத்திட்டங்களைக் **கல்வி** என்ற முறையில் இன்று கற்றுக்கொடுக்க வேண்டும்.

அதுவும், எல்லோருக்கும் ஒரே மாதிரியான பாடத்திட்டங்கள் ஆரம்பக்கல்வியில், அரசுப்பள்ளிகளில் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

இது **சமயங்கள், மதங்கள்** கடந்த கல்வி முறையான "**அறிவை அறியும் அறிவு**" என்ற முறையில் எல்லோருக்கும், ஒழுக்கத்தையும், நற்பண்புகளையும் ஏற்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். இதனால், இனி வருகின்ற இளைய தலைமுறை ஜாதி, மதங்களைக்கடந்த, நற்பண்புகளைக் கொண்ட, ஒழுக்கத்துடன் கூடியதாக அமையும்.


**"ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையாது!"** என்பதை நினைவில் கொண்டு, ஆரம்பத்தில் நற்பண்புகளைக் கொடுக்கக்கூடிய கல்வியைக் கற்றுக் கொடுத்துவிட்டு, அதன்பிறகு, 10 - ஆம் வகுப்புகளுக்கு மேலேயுள்ள, மேற்படிப்புகளான பாடத்திட்டங்களில் மட்டுமே **தொழிற்கல்வியை** கற்றுக் கொடுக்கின்ற கல்வியாக தனியார் வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

நன்றி!

என்றும் அன்புடன்,

**சுவாமி பிரபஞ்சநாதன்.**

# கல்வி!



சுவாமி பிரபஞ்சநாதன்